பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

புதுச்சேரி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(11.06.2022 முதல் 15.06.2022 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 046 (06) PJN/GKMS/2022 தேதி: 10.06.2022

## புதுச்சேரி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (07.06.2022 முதல் 09.06.2022 வரை) | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -15.06.2022 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 07/06 | 08/06 | 09/06 | | நாள்-1 11/06 | நாள்-2 12/06 | நாள்-3 13/06 | நாள்-4 14/06 | நாள்-5 15/06 |
| 34.7 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 6 | 0 | 0 |
| 36 | 33 | 36 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 36 | 36 | 36 | 35 | 35 |
| 22 | 25 | 26 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 27 | 27 | 27 | 27 | 27 |
| 7 | 5 | 2 | மேக மூட்டம் | 4 | 4 | 4 | 4 | 4 |
| 72-89 | 72-76 | 72-79 | ஈரப்பதம் (%) | 65-75 | 65-75 | 65-75 | 65-75 | 65-75 |
| 4 | 2 | 4 | காற்றின் வேகம் (கி.மீ) | 8 | 8 | 8 | 8 | 10 |
| தெற்கு தென் மேற்கு | வடக்கு | தெற்கு தென் கிழக்கு | காற்றின் திசை | தெற்கு தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | தென் மேற்கு |

எதிர்பார்க்கப்படும் வானிலை (11.06.2022 முதல் 15.06.2022 வரை):

→ ஜூன் 13 தேதியில் அநேக இடங்களில் லேசான மழை இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

→ ஜூன் 11 லிருந்து 13 வரை இடியுடன் மின்னல் ஓரிரு இடங்களில் இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் ஓரளவுக்கு மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்ப நிலை 27-36 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 65-75 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் மணிக்கு 08-10 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் தெற்கு தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

ஜூன் 15 லிருந்து 21 வரை மழை (2.50 மி.மீ) இயல்பிற்கு அதிகமாகவும், அதிகபட்ச வெப்பநிலை (34.35 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (24.49 டி.செ) இயல்பாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

வேளாண் அறிவுறை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| நெல் | தூர் கட்டும் பருவம் | நெற் பயிரில், குருத்துப் பூச்சிகளை கட்டுப்படுத்த, டிரைக்கோகிராமா ஜப்பானிக்கம் ஒட்டுண்ணிகளை ஹெக்டருக்கு 1,00,000 (நடவு நட்டபின் 37, 44 and 51 நாட்களில்) பயன்படுத்தலாம் அல்லது லிட்டருக்கு 4 மி.லி அசாடிராக்டின் (0.03 %) அல்லது கார்டேப்ஹைட்ரோகுளோரைடு (cartaphydrochloride 50% SP) லிட்டருக்கு 2 கிராம் அல்லது ஃப்ளுபெண்டையமைடு (flubendiamide 20 WG) லிட்டருக்கு 0.25 கிராம் அல்லது தையமீதாக்சம் (thiamethoxam 25 WG) லிட்டருக்கு 0.2 கிராம் என்ற அளவில் தெளிக்கலாம். |
| தென்னை | காய்க்கும் பருவம் | தென்னையில் சுருள் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்த தண்ணீரை நன்கு பீய்ச்சி அடித்தும் மற்றும் ஏக்கருக்கு 8 மஞ்சள் நிற ஒட்டும் பொறிகளையும் வைத்து கட்டுப்படுத்தவும். இதன் தாக்குதல் அதிகமாக இருப்பின் வேப்பஎண்ணெய் 0.5 %+ டிவீன் 80 (0.005%) பயன்படுத்தவும். |
| பாகல் மற்றும் புடலை | காய்க்கும் பருவம் | பாகல் மற்றும் புடலையில் பெண்பூக்களின் எண்ணிக்கைகளை அதிகரிக்க எத்ரல் கரைசலை 100 பிபிஎம் , பீர்க்கனில் 250 பிபிஎம் விதைத்த 15 வது நா ளிலிருந்து வாராந்திர இடைவெளியில் நான்கு முறை தெளிக்கவும் |

**குறுஞ்செய்தி: ஜூன் 13 தேதியில் லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை ஒத்திவைக்கலாம்.**

**முதல்வர்**